RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 215 | ஆகஸ்டு.7 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் ரூ.262 கோடியில் மருத்துவக் கட்டமைப்புகள்

சென்னை, ஆக.07-

சென்னை அரசு பல் மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் ரூ.261.83 கோடியிலான மருத்துவக் கட்டமைப்புகள் விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும் என்று சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சென்னை பிராட்வேயில் உள்ள தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், ரூ.33.57 லட்சத்தில் வாய் முக தாடை சிறப்பு ஊடுகதிர் படக்கருவி, ரூ.3.39 லட்சத்தில் ஒளித் தூண்டக் கூடிய பாஸ்பர் தகடு ஸ்கேன், ரூ.11 லட்சத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, ரூ.14.62 லட்சத்தில் இணையவழி நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.

மொத்தம், ரூ.62.60 லட்சத்தில் உட்கட்டமைப்பு மற்றும் உபகரணங்களை பயன்பாட்டுக்கு சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று கொண்டு வந்தார். இந்நிகழ்வில், சுகாதாரத் துறை செயலர் ப.செந்தில்குமார், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் (பொ) தேரணிராஜன்,



தமிழ்நாடு அரசு பல் மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் பிரேம்குமார் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

அப்போது, செய்தியாளர்களிடம் அமைச்சர் கூறியதாவது: தமிழகத்தின் பழம்பெரும் பல் மருத்துவக் கல்லூரி, பல்வேறு நிலைகளில் வளர்ச்சி பெற்று 100 இளங்கலை பல் மருத்துவ மாணவர்கள் படிக்கும் வகையிலும், 40 முதுகலை பல் மருத்துவ இடங்களுடன் மிகச் சிறப்பாக செயல்படுகிறது. தினமும் 1,500 பேர் புறநோயாளிகளாகவும், உள்நோயாளிகளாகவும் பயன் பெற்று வருகின்றனர்.

ரூ.261.83 கோடியில் பல்வேறு வகைகளிலான புதிய மருத்துவக் கட்டமைப்புகள் இந்த வளாகத்தில் கட்டப்பட்டு வருகின்றன. அவை செப்டம்பர் மாதத்துக்குள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும். சுகாதாரத் துறையில் ஒரு மருத்துவர் பணியிடம் கூட காலி இல்லாத அளவுக்கு அனைத்து பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 48 பல் மருத்துவர்கள், 450 தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு முதல்வர் பணி ஆணைகளை வழங்கவுள்ளார். பல் மருத்துவர்களை பணியிடமாற்றம் செய்வது தவறு இல்லை. இங்கு ஒருவர் மருத்துவராக வருகிறார் என்றால் அவர் ஓய்வு பெறும் வரை இங்கு பணியாற்ற வேண்டும் என்ற நிபந்தனை இல்லை. பணியிட மாறுதலுக்காக வெளிப்படை தன்மையுடன் கலந்தாய்வு நடைபெறுகிறது.

கடந்தகால அதிமுக ஆட்சியில் எந்த திட்டம் தொடங்கினாலும் அம்மா அம்மா என்றே பெயர் வைத்தனர். லட்சக்கணக்கான மக்கள் பயன்பெறும் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தால் திமுகவுக்கு பொதுமக்கள் மத்தியில் ஆதரவு கூடியிருப்பதால், காழ்ப்புணர்ச்சி காரணமாக அதிமுகவினர் வழக்கு தொடர்ந்துள்ளனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ரஷ்யாவிடம் தொடர்ந்து எரிபொருள் வாங்குவதால் இந்தியா மீதான வரியை மேலும் உயர்த்துவேன்: ட்ரம்ப் தகவல்

வாஷிங்டன், ஆக.07-

அமெரிக்க அதிபராக ட்ரம்ப் மீண்டும் பதவியேற்ற பின், அமெரிக்காவுடன் வர்த்தகம் செய்யும் நாடுகள் மீது பரஸ்பரவரி விதிக்கப்படும் என கூறியிருந்தார். இதன் காரணமாக அமெரிக்காவுடனான வர்த்தக பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படவில்லை. அமெரிக்காவுக்கு ஓராண்டில் ரூ.8,650 கோடி அளவுக்கு இந்தியா ஏற்றுமதி செய்கிறது. இவற்றில் மருந்து பொருட்கள், எரிசக்தி, கனிமங்கள், எலக்ட்ரானிக் பொருட்களுக்கு வரிவிலக்கு உள்ளது.


ரஷ்யாவிடம் இருந்து இந்தியா அதிகளவில் கச்சா எண்ணெய் இறக்



குமதி செய்வதாக கூறிய ட்ரம்ப் இதன் மூலம் உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் போருக்கும் இந்தியா நிதி அளிக்கிறது'' என குற்றம் சாட்டினார். இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு நாளை முதல் 25% வரி விதிக்கப்படும் என அதிபர் ட்ரம்ப் ஏற்கெனவே கூறியிருந்தார்.

இந்நிலையில் ட்ரம்ப் நேற்று அளித்த பேட்டியில் கூறியதாவது: வர்த்தகம் செய்வதற்கு ஏற்ற நல்ல நாடாக இந்தியா இல்லை. ஏனென்றால், இந்தியா அமெரிக்காவுக்கு ஏராளமான பொருட்களை ஏற்றுமதி செய்கிறது.

ஆனால், அமெரிக்காவிடம் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு இந்தியா மிக அதிக வரியை விதிக்கிறது. இதனால் இந்தியாவில் அமெரிக்க பொருட்களை விற்க முடியவில்லை. அதனால் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25% வரி விதிக்கப்பட்டது. ஆனால், அடுத்த 24 மணி நேரத்தில் வரியை மேலும் உயர்த்த உள்ளேன். இவ்வாறு அவர் கூறினார்.



## மானாமதுரையில் அமமுகவில் இருந்து விலகி தொடர்ந்து அதிமுகவில் இணையும் கட்சி நிர்வாகிகள்

சிவகங்கை, ஆக.7-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் மானாமதுரை முன்னாள் கவுன்சிலர் அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் முன்னாள் நகர் செயலாளருமான

வி.என். சந்திரசேகர் சிவகங்கை மாவட்ட செயலாளர், சிவகங்கை எம்எல்ஏ பி. ஆர். செந்தில்நாதன் தலைமையில் அவரை நேரில் சந்தித்து, வழக்கறிஞர் சுரேஷ்பாபு ஏற்பாட்டில் அதிமுகவில் இணைந்தார். இந்நிகழ்வின்போது சிவகங்கை மாவட்ட இளைஞரணி துணைச் செயலாளர் அசோக்குமார், சிவகங்கை மாவட்ட இளைஞர் அணி துணை செயலாளர் நாகு, இடைக்காட்டூர் முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் சசிகுமார், வழக்கறிஞர் மணிகண்டன் மற்றும் அதிமுக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதம் 11.19%: முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

சென்னை: ஆக.7-

தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதம் 11.19% என மத்திய அரசின் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் வெளியாகியுள்ளது. தமிழ்நாடு இந்தியாவிலேயே இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தை எட்டியுள்ளது என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், 'இந்தியாவிலேயே இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தை எட்டிக் காட்டியுள்ள ஒரே அரசு தமிழ்நாட்டின் திராவிட மாடல் அரசு. இந்தியாவிலேயே அதிகபட்சமாக 9.69% பொருளாதார வளர்ச்சியுடன்



தமிழ்நாடு முதலிடம் என்று கூறி வந்தோம் அல்லவா... அதையும் தாண்டி, தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதம் 11.19% என ஒன்றிய அரசின் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் வெளியாகியுள்ளது.

இதற்கு முன்பு, இரட்டை இலக்க வளர்ச்சி எட்டப்பட்டது 201011ஆம் ஆண்டில். அப்போது கலைஞர் ஆட்சி. இப்போது கலைஞர் வழி நடக்கும் திராவிட மாடல் ஆட்சி. இரண்டுமே கழக ஆட்சி.

2030ஆம் ஆண்டுக்குள் One Trillion Dollar பொருளாதாரம் என்ற போது பலரது புருவமும் உயர்ந்தது. "இது மிக உயர்ந்த இலக்கு, எப்படி சாத்தியமாகும்?" என்றார்கள்! இதே வேகத்தில் சென்றால், எதுவும் சாத்தியம் என்பது இப்போது மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின் (குறள் 666)' எனத் தெரிவித்துள்ளார்

## ஜல் ஜீவன் திட்டம் முறையாக செயல்படுத்தவில்லை என அண்ணாமலை தவறான தகவலை கூறி வருகிறார். பொதுமக்களிடையே பீதியை கிளப்பி வருகிறார்

### கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் பதிலடி

சிவகங்கை. ஆக.07

சிவகங்கை அருகே உள்ள கல்குளத்தில் இளையான்குடி சுற்றுச்சாலையின் ரூ 96 கோடி மதிப்பீட்டில் இரண்டாம் கட்ட பணியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் மாவட்ட ஆட்சியர் பொற்கொடி நேற்று துவக்கி வைத்தனர். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் கேஆர். பெரியகருப்பன், தமிழகம் முழுவதும் உங்களுடன் ஸ்டாலின் முகாம் 10 ஆயிரம் இடங்களில் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் 250 முகாம்களில் நடத்த திட்டமிடப்பட்டு நாள்தோறும் 6 முகாம்கள் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. உங்களுடன் ஸ்டாலின் முகாம்களுக்கு மக்கள் எதிர்பார்ப்புடன் வருகின்றனர். முதலமைச்சரின் மீது உள்ள நம்பிக்கையால், நம்பிக்கையுடன்



திரும்பிச் செல்கின்றனர். ஒரு சில பணிகளுக்கு முகாம்களில் தீர்வு காணப்பட்டு சான்றிதழ் வழங்கப்படுகிறது. பிற மனுக்கள் மீது அதிகாரிகள் கள ஆய்வு மேற்கொண்டு 45 தினங்களுக்குள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்பட்டுள்ளது. சராசரியாக ஒவ்வொரு முகாம்களுக்கும் ஆயிரம் மனுக்கள் வருகின்றன. உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் மகளிர் உதவித்தொகை கேட்டு கூடுதலாக மனுக்கள் வருகின்றன. மகளிர் உரிமைத் திட்டம் கிடைக்காத எஞ்சியவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காக முதலமைச்சர் தளர்வுகளை மேற்கொண்டுள்ளார். நாட்டாகுடியில் வசிப்பவர்களிடையே முன் விரோதம் இன்றி இரண்டு கொலைகள் நடைபெற்றுள்ளது. கிராமங்களில் இருந்து நகரங்களை நோக்கி கல்வி, வேலைவாய்ப்பு, போன்ற காரணங்களுக்காக இடம் பெயர்வது வாடிக்கை. அதை போல் நாடாகுடியிலிருந்து சிவகங்கைக்கு, அக்கிராம மக்கள் குடிபெயர்த்துள்ளனர்.

இரு கொலைகள் நடைபெற்றதால் அக்கிராம மக்களிடையே அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது. நாட்டாகுடியில் தண்ணீர், சாலை, மின்சாரம், அலுவலக பணி போன்ற அடிப்படை வசதிகள் அரசு சார்பில் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

ஜல் ஜீவன் திட்டம் செயல்படுத்தவில்லை என கூறும் பாஜக முன்னால் தலைவர் அண்ணாமலை சந்தேகம் இருந்தால் நாட்டாகுடிக்கு வந்து நேரடியாக பார்வையிடட்டும் என்றார். அண்ணாமலையின் அறிக்கை அமைதியாக வாழும் மக்களிடையே பீதியை கிளப்பும் விதமாக உள்ளது. இதனை அண்ணாமலை தவிர்க்க வேண்டும் எனகே ஆர் பெரிய கருப்பன் கேட்டுக்கொண்டார்.





# வேலூரில், ரெட்டி நல சங்கம், மாநில துணைச் செயலாளர் ரிஷிகுமார் ரெட்டி தலைமையில் பொதுக் குழு கூட்டம்!!

வேலூர், ஆக.7-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, கிரீன் சர்க்கிள் ஆரியாஸ் கூட்டரங்கில், ரெட்டி நல சங்கம், மாநில துணைச் செயலாளர் ரிஷிகுமார் ரெட்டி மற்றும் மாவட்டத் தலைவர் கோகுல் ரெட்டி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளர்களாக மாநில தலைவர் ரவி ரெட்டி, செயலாளர் ராஜா பூர்ண சந்திரன் ரெட்டி, பொருளாளர் அருண்குமார் ரெட்டி, துணைத் தலைவர் சண்முகம் ரெடி, ஏர் மட்டக் குழு உறுப்பினர் கேசவன் ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டு விழாவில் சிறப்புரையாற்றி சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் சங்கம் வளர்ச்சிக்கான செயல்பாடுகள் குறித்து ஆலோசனைகள் மேற்கொண்டனர். இதனைத் தொடர்ந்து பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்தில் முக்கிய பொறுப்பாளர்கள், நிர்வாகிகள் விவசாயி ஊசூர் பெருமாள் ரெட்டி மற்றும் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# வேலூரில் மேக்ஸிமா டெக்னாலஜிஸ் கடை திறப்பு விழா!

வேலூர், ஆக.7-

வேலூர் மாவட்டம், வேலூர் கிரீன் சர்க்கிள் நியூ பைபாஸ் சாலையில், மேக்ஸிமா டெக்னாலஜிஸ் கடை திறப்பு விழா நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர்கள் ஸ்ரீ நாராயணி குழும நிறுவனங்களின் இயக்குனர் மற்றும் அறங்காவலர் பேராசிரியர் என். பாலாஜி கலந்து கொண்டு வாழ்த்து திறந்து வைத்து குத்துவிளக்கேற்றி, வாழ்த்து தெரிவித்து சிறப்பித்தனர். சிறப்பு சிறப்பு விருந்தினராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் முகமதுசகி மற்றும் தொழிலதிபர்கள், வாடிக்கையாளர்கள் என பலர் கலந்து கொண்டு திறப்பு விழாவை சிறப்பித்தனர்.



# வேலூரில், ஆசிரியர் இல்ல கூட்டரங்கில், மாநில அளவில் பள்ளி மற்றும் கல்லூரி அனைத்து ஆசிரியர்கள் சிறப்பு பேரவை கூட்டம்

வேலூர் ஆக.07

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் வேலூர், பில்டர் பெட்ரோட், ஆசிரியர் இல்ல கூட்டரங்கில், மாநில அளவில் ஆசிரியர்கள் சிறப்பு பேரவை கூட்டம், தமிழ்நாடு கல்வி பாதுகாப்பு இயக்கம் சார்பில், தமிழ்நாடு மாநில அமைப்பு துவக்க, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் பங்கேற்ற மாநில அளவிலான ஆசிரியர்கள் சிறப்பு பேரவைக் கூட்டம், மாநில ஒருங்கிணைப்பாளர் எம்.சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர் சேகர் வரவேற்புரை யாற்றுகையில், தேசிய துணைத் தலைவர் மூர்த்தி, மாவட்ட செயலாளர் லதா, மாநில ஒருங்கிணைப்பாளர் சுப்பிரமணியன், மாநில பொதுச் செயலாளர் மணி, தலைமை ஆசிரியர் கழகம் பாஸ்கர், அகில இந்திய துணைத் தலைவர் ரவி ஐசக் மேரி மற்றும் முக்கிய பொறுப்பாளர்கள் நிர்வாகிகள் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. இறுதியில் மாவட்ட செயலாளர் சேகர் நன்றியுரையாற்றி கூட்டம் நிறைவுபெற்றது.



■ திருப்பூர் மாநகராட்சி வார்டு 57 வெள்ளியங்காடு பகுதியில் உள்ள சீனிவாசன் நகரில் கழிவு நீர் தேங்கியுள்ளதை மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் பார்வையிட்டு கழிவு தேங்காவண்ணம் மழை நீர் வடிகால் மாற்றி அமைப்பது குறித்து ஆய்வு மேற்கொண்டார் உடன் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்

# வேலூர் நறுவீ மருத்துவமனையில் தேசிய உறுப்பு தான தினம் : உடல் உறுப்பு தானத்தில் தமிழ்நாடு முதலிடம் என டாக்டர். வெங்கட்ராமன் சிறப்புரை




வேலூர். ஆக.07

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா தோட்டப்பாளையம் வடக்கு, வேலூர் நறுவீ மருத்துவமனையில் 0508 2025 நடைபெற்ற தேசிய உறுப்பு தான தின

விழாவில் உறுப்பு தானம் செய்தவர்கள் மற்றும் அதன் மூலம் பயனடைந்தவர்களை மருத்துவமனை துணைத் தலைவர் அனிதா சம்பத் பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.

1994 ஆம் ஆண்டு ஆகஸ்டு 3ம் தேதி இந்தியாவில் முதல் முதலாக இருதய மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டது. அது முதல் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு 3ம் தேதி தேசிய உடல் உறுப்பு தான தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதன்படி, வேலூர் நறுவீ மருத்துவமனையில் உடல் உறுப்பு தானம் பற்றிய விழிப்புணர்வு மற்றும் ஊக்குவிப்பை ஏற்படுத்தும் வகையில், தேசிய உடல் உறுப்பு தான தின நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்தவர்களை மருத்துவமனை தலைமை இயக்குதல் அலுவலர் சரவணன் ராமன் வரவேற்று பேசுகையில்: நறுவீ மருத்துவமனையில் உடல் உறுப்புகளான இருதயம், கல்லீரல், நுரையீரல் மற்றும் சிறுநீரகம் மாற்று அறுவை மாற்று அறுவை சிகிச்சை செய்ய தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டு

வருகிறது. தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகளிலும், நறுவீ உட்பட 134 தனியார் மருத்துவமனைகளிலும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை நடத்தப்பட்டு வருகிறது. உடல் உறுப்பு தானம் வழங்க முன் வருபவர்கள் transtan.tn.gov.in என்ற வலைதளம் மூலம் விருப்பம் தெரிவிக்கலாம் என சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் இந்திய மருத்துவ சங்கத்தின் வேலூர் கிளைத் தலைவர் டாக்டர்.வெங்கட்ரமணன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று நிகழ்வை தொடங்கி வைத்து பேசுகையில் நாட்டில் சுமார் 2.8 இலட்சம் பேர் உடல் உறுப்பு தானம் செய்ய முன்வருகின்றனர். உடல் உறுப்பு தானம் செய்வதில் இந்தியாவில் தெலுங்கானா, மகாராஷ்டிரா, தமிழ்நாடு, தில்லி ஆகிய மாநிலங்களில் அதிக அளவில் நடைபெறுகிறது. அதிலும் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் இதுவரையிலும் 10827 பேர் உடல் உறுப்பு தானம் செய்துள்ளனர் என்றார். இதனைத் தொடர்ந்து நறுவீ மருத்துவமனை சிறுநீரகவியல் நிபுணர் டாக்டர். இதயசந்திரன் பங்கேற்று பேசுகையில் ஒருவர் தனது உடலில் ஒன்பது உறுப்புகளை தானமாக வழங்க முடியும். உடல் உறுப்பு தானம் பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே உருவாக வேண்டும். இது ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கும். பத்து இலட்சத்தில் ஒருவர் தான் உடல் உறுப்பு தானம் செய்ய முன் வருகின்றனர். அதுமட்டுமில்லாமல் மூளைச்சாவு அடைந்தவர்களை உயிர்பிழைக்க வைக்க முடியாது என்பதால் மூளைச்சாவு அடைந்தவர்களின் உறுப்புகளை தானமாக பெற்று மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது.

இவ்விழாவில் உடல் உறுப்பு தானம் செய்தவர்கள் மற்றும் அதன் மூலம் பயனடைந்தவர்களை நறுவீ மருத்துவமனை துணைத் தலைவர் அனிதா சம்பத் பொன்னாடை அணிவித்து கௌரவித்தார். இதில் மருத்துவமனை செயல் இயக்குநர் டாக்டர். பால் ஹென்றி, மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர். ஜேக்கப்ஜோஸ், மருத்துவமனை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வேலூரில், தெரு மின் விளக்கு, கழிவுநீர் கால்வாய் வசதி, குடிநீர் வசதி, சாலை வசதி ஆகிய அடிப்படை வசதிகளை செய்து தரக்கோரி அதிமுக மாமன்ற உறுப்பினர் தரையில் உருண்டு அங்கப்பிரதேசன போராட்டம்

வேலூர் ஆக.7

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் மாநகராட்சி, மண்டலம் 4, 49வது வார்டு தொரப்பாடி பகுதியில் தெரு மின்விளக்கு வசதி, சாலை வசதி, கழிவுநீர் கால்வாய் வசதி, சுத்தமான நிரந்தர குடிநீர் வசதிகள் ஆகிய அடிப்படை வசதிகளை செய்து தரக்கோரி பலமுறை மனு அளித்தும் அடிப்படை வசதிகளை செய்து தராததால் அப்பகுதி வார்டு கவுன்சிலர் மாமன்ற உறுப்பினர் எஸ்.லோகநாதன் 49 வது வார்டு பொதுமக்கள் சமூக ஆர்வலர்களுடன் மாமன்ற உறுப்பினர் தரையில் உருண்டு மக்களுக்காக சாலை வசதி, கழிவுநீர் கால்வாய் வசதி



அமைத்து தரக்கோரி நூதன முறையில் போராட்டம் நடத்தினர். இது குறித்து பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

எஸ். லோகநாதன் என்பவர் அதிமுக கவுன்சிலர் என்பதால் மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் மாநகராட்சி திமுக மேயர் அவரை கண்டுகொள்ளவில்லை என இப்பகுதி மக்கள் தெரிவித்து வருகின்றனர். அப்பகுதியில் பள்ளிகளும் மருத்துவமனைகளும் வழிபாட்டு தலங்களும் உள்ளதால் பொதுமக்கள் சாலையில் செல்லக்கூட முடியவில்லை இதனால் அப்பகுதி பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் உடனடியாக அடிப்படை வசதிகளை செய்து தர கோரிக்கை வைத்துள்ளனர்.



■ இராமநாதபுரம் மாவட்டத்தில் சாலை விபத்துகளைத் தடுக்கும் விதமாகவும், போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தும் விதமாகவும் இராமநாதபுரம் மாவட்ட போக்குவரத்து காவல்துறைக்கு சாலைப் பாதுகாப்பு நிதியிலிருந்து சுமார் 6.40 இலட்சம் மதிப்புள்ள LED Baton Light, Reflective Jackets, Wheel Locker, Breath Analyzer, Solar Based Speed Display with Flash, Reflective Sticker, traffic Cones, Reflective Traffic Rain Coat ஆகிய உபகரணங்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் G.சந்தீஷ்.IPS. வழங்கினார்

# வேலூரில் சிறை மற்றும் சீர் திருத்த நிர்வாக பயிலகத்தில் பயிற்சி முடித்த அதிகாரிகளுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டது

வேலூர், ஆக.07

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, தொரப்பாடி, மத்திய சிறைச்சாலையில், உள்ள சிறை மற்றும் சீர் திருத்த நிர்வாக பயிலகத்தில் 048 2025 திங்கட்கிழமை அன்று கர்நாடகாவை சேர்ந்த 8 சிறைத்துறை அதிகாரிகள் மற்றும் கேரளாவை சேர்ந்த 4 சிறைத்துறை அதிகாரிகள் என மொத்தம் 12 அதிகாரிகள் மூன்று மாதங்கள் பயிற்சியை நிறைவு செய்தனர். இதில் கைதியை கையாளுதல் குற்றவியல் சட்டங்கள் சிறை அதிநவீன தொலை தொடர்பு கருவிகளின் பயன்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டது. இதன் பயிற்சி



நிறைவு விழாவானது சிறை மற்றும் சீர் திருத்த நிர்வாக பயிலகத்தின் இயக்குநர் பிரதீப் பயிற்சி முடித்த அதிகாரிகளுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றுகளை வழங்கினர். இவ்விழாவில் சிறைத்துறை அதிகாரிகள் பணியாளர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

நீங்கள் குற்றவியல் உளவியல் சட்டங்கள் மற்றும் தடவியல் உள்ளிட்டவைகள் பயிற்சி பெற்றுள்ளனர் ஆனால் நீங்கள் அவற்றில் இருந்து என்ன கற்றீர்கள் என்பது தான் நீங்கள் நடந்துகொள்ளும் விதத்தில் உள்ளது நல்ல பண்பையும் கைதிகளை சிறையில் நீங்கள் நடத்துவிதமும் நன்றாகவே இருக்க வேண்டுமென சிறப்புரையாற்றினர்.



■ திருப்பூர் மாவட்டம் அவினாசி நகராட்சி கைகாட்டி புதூர் சமுதாய கூடத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் சாமிநாதன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காணப்பட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் மோகனசுந்தரம் ,அவினாசி நகர் மன்ற தலைவர் தனலட்சுமி பொன்னுச்சாமி ஆகியோர் உடன் இருந்தனர்




■ மதுரை மாவட்டம் கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம் வில்லூர் போத்தநதி, எம். புளியங்குளம் மறவபட்டி ,தென்னமநல்லூர், சித்தூர், புதுப்பட்டி, ஆகிய ஊராட்சிகளுக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமினை கள்ளிக்குடி வட்டாட்சியர் சிவகுமார்,வட்டார வளர்ச்சி அலுவலர் தங்கவேலு ஆகியோர் குத்துவிளக்கேற்றி துவங்கி வைத்தனர். முகாமில்துணை வட்டார வளர்ச்சி அலுவலர் முத்துசெல்வி ஊராட்சி செயலாளர்கள் வில்லூர் சேகர், போத்தநதி பாண்டியராஜன், எம் புளியங்குளம் சந்தனசோனண முத்து, மறவபட்டி, தென்னம நல்லூர் பரமசிவம், சித்தூர் வனிதாலெட்சுமி, புதுப்பட்டி செல்வவிநாயகம், ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்றனர் நிகழ்வில் அனைத்து துறை அரசு அதிகாரிகள்மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.






## வேலூரில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் தமிழ் கனவு நிகழ்ச்சி : மண்டல கல்லூரி இணை இயக்குனர் டாக்டர். அ.மலர் பங்கேற்று சிறப்புரை

வேலூர் ஆக.7-

வேலூர் மாவட்டம், வேலூர் ஊரிசு கல்லூரி டிபோர் அரங்கத்தில், மாபெரும் தமிழ் கனவு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி தலைமையில் நடைபெற்றது. மாவட்டாட்சியர் சிறப்புரையாற்றி துவக்கி வைத்ததை தொடர்ந்து, இந்நிகழ்ச்சியில் சொற்பொழிவாளர்/ வழக்கறிஞர் அ.அருள்மொழி, தமிழ்நாடு கண்ட புதுமை பெண்கள் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றி, தரமான கேள்விகளை எழுப்பிய மாணவர்களுக்கு கேள்வியின் நாயகன் என்ற சான்றிதழை வழங்கி பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில் மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குநர் முனைவர். அ.மலர், முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரி முதல்வர் ஸ்ரீதர், ஊரீசு கல்லூரி முதல்வர் ஆனிகமலா ப்ளாரன்ஸ் கல்லூரி மாணவ மாணவிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




■ மதுரை மாவட்டம் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் திரளி ஊராட்சியில் ஆலம்பட்டி புதுப்பட்டி, நடுவகோட்டை கிழவனேரி,அலபலச்சேரி சௌடார்பட்டி,காங்கேய நத்தம், உரப்பனூர் ஆகிய ஊராட்சிகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமை திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் சிவஜோதி,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சந்திரகலா,மலர்வண்ணன், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் தீபலட்சுமி, மகேஸ்வரி திருமங்கலம் வட்டாட்சியர் சுரேஷ்கிளமண்ட் குத்து விளக்கு ஏற்றிதுவக்கினார்கள்.உடன்ஊராட்சி செயலாளர்கள் திரளி ஊராட்சி மன்ற செயலாளர்ராஜ்குமார் ஆலம்பட்டி ஊராட்சி செயலாளர் ராஜேந்திரன் புதுப்பட்டி ஊராட்சி செயலாளர் தாமரை செல்வி நடுவக்கோட்டை கிழவனேரி ஊராட்சி செயலாளர் தமிழரசன் அலப்பச்சேரி ஊராட்சி செயலர் சுரேஷ் சௌடார்பட்டி ஊராட்சி செயலர் திக்விஜயன் காங்கேயநத்தம் ஊராட்சி செயலர் பால்ராஜ் உரப்பனூர் ஊராட்சி செயலாளர் இளங்கோ ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்களைப் பெற்றனர்.





## இளையான்குடியில் கொட்டும் மழையில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு முன்னணியிரின் ஆர்ப்பாட்டம்

இளையான்குடி, ஆக.07

சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாவட்ட குழு உறுப்பினர் எஸ் ராஜு தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது. தூத்துக்குடி மாவட்டம் மென்பொருளாளர் கவின் ஆணவ சாதிவெறி படுகொலையை கண்டித்தும் சாதி ஆவண படுகொலைக்கு எதிராக சட்டம் இயற்ற வலியுறுத்தியும் தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி கோஷமிட்டனர் .இந்த ஆர்ப்பாட்டத்தில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் இந்திய ஜனநாயக மாதர் சங்கம் சார்பில் துவக்க உரை தீண்டாமை ஒழிப்பு முன்னணியில் மாவட்ட தலைவர் S.முத்துராமலிங்க பூபதி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் ஒன்றிய செயலாளர் ஜேம்ஸ் வளவன், தியாகி இமானுவேல் பேரவையின் மாநில முதன்மைச் செயலாளர் வழக்கறிஞர் வேல்முருகன், இந்திய ஜனநாயக மாதர் சங்கம் சார்பில் S.சாந்தி, இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் சார்பில் K.கௌதம், A. சுரேஷ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தாலுகா செயலாளர் எஸ் சந்தியாகு, தீண்டாமை ஒழிப்பு முன்னணி சார்பில் P.Mஸ்வநாதன், எஸ் விஜயன் மாவட்ட பொருளாளர் ஆர் வீரையா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சிவகங்கை மாவட்ட செயலாளர் ஏ ஆர் மோகன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். இறுதியாக தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் மாவட்ட செயலாளர் வி கருப்புசாமி நிறைவுறையாற்றினார். கொட்டும் மழையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள் உட்பட ஏராளமானவர் கலந்து கொண்டனர்.

## சோழிங்கநல்லூர் உள்ளகரம் எஸ். ஆர் .கே, மண்டபத்தில் "உங்களுடன் ஸ்டாலின் முகாம்"

சோழிங்கநல்லூர் ஆக.7-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதி : இடம் சென்னை மாநகராட்சி 14 மண்டலம் , உள்ளகரம், எஸ். ஆர் .கே, மண்டபத்தில் ஆகஸ்ட் (06) "உங்களுடன் ஸ்டாலின் முகாம்" தமிழக முதல்வர், மு .க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் , உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் வழிகாட்டுதலில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ். அரவிந்த் ரமேஷ் தலைமை தாங்கி முகாமை துவக்கி வைத்தார். 186 வது மாமன்ற உறுப்பினர், ஜே.கே.மணிகண்டன் அனைவரையும் வரவேற்று மக்களுக்கு தேவையான வசதியும், உதவிகளும் செய்து கொடுத்தனர்.





உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மக்களை தேடி மருத்துவ, எந்த குறையாக இருந்தாலும் முகாமில் மனுக்களாக அளிக்கலாம் என்ற முதல்வர் உத்தரவின் பேரில் பல்வேறு துறைகளில் ஊரகப்பகுதிகளில் 15 துறைகள், 46 சேவைகள், நகர்ப்புற பகுதிகள் 13 துறைகள், 43 சேவைகள் சார்ந்த அரசு அதிகாரிகள், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ் .அரவிந்த் ரமேஷ்

பொதுமக்களின் குறைகளை பொறுமையாக கேட்டு அறிந்த போது நீண்ட வரிசையில் காத்திருந்த மக்களுக்கு நேரடியாக சென்று மனுக்களை கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அலுவலர்களிடம் ஒப்படைத்தார். தொடர்ந்து முகாமில் சில துறைகளில் மூலம் உடனுக்குடன் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. மக்களுக்கு சான்றிதழை எம்.எல்.ஏ வழங்கினார். உடன் அனைத்து துறை அரசு அலுவலர்கள் திமுக கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் தங்களது மனுக்களுக்கு தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையுடன் பொதுமக்கள் கூறி சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வேலூரில், தேசிய முற்போக்கு திராவிட கழகம் சார்பில் பூத் முகவர்கள் ஆலோசனை கூட்டம் : தே.மு.தி.க பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பங்கேற்று சிறப்புரை

வேலூர் ஆக.07-

வேலூர் மாவட்டம், ஆஃபீஸர்ஸ் லைன், டோல்கேட், பங்கஷன் ஹாலில்,வேலூரில், தேசிய முற்போக்கு திராவிட கழகம் சார்பில் வேலூர் மாவட்ட பூத் முகவர்கள் ஆலோசனை கூட்டம், மாவட்ட செயலாளர் கே புருஷோத்தமன் தலைமையிலும், பா.ஜெகதீசன் வரவேற்புரையில், மாவட்ட பொருளாளரும், காட்பாடி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமான ஆர்.செந்தில்குமார் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் மற்றும் மாநில பொருளாளரும், உயர் மட்டக்குழு உறுப்பினர் மற்றும் மண்டல தேர்தல் பொறுப்பாளருமான



எல்.கே.சுதீஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் முன்னாள் எம்எல்ஏ நல்லதம்பி, திருநாவுக்கரசு, சண்முகம் குமார் திருமூர்த்தி, சாக்கு முத்தரசு முருகன்னு சுரேஷ் பாபு சிட்டிபாபு மணிகண்டன் தேவன் யுவராஜ், கேப்டன் மன்றம் சுரேஷ் அண்ணாதுரை முத்து வேல்முருகன் ராமமூர்த்தி, இளைஞர் அணி ராஜ்குமார் முருகன் ஸ்டீபன் வேலூர் சரத்குமார் மகள் மகளிர் அணி மகாலட்சுமி புருஷோத்தமன் குணசுந்தரி லதா ஜோதி முருகன் நிஷா, மாணவரணி கோகுல் மோட்டார்ஸ் தொழிலதிபர் வி.பி சுந்தரவடிவேல் மற்றும் அனைத்து பணி பிரிவினர் நிர்வாகிகள் உறுப்பினர்கள் என திரளாக கலந்து கொண்டனர். இறுதியில் பல்லாவரம் பகுதி செயலாளர் வி.திருமூர்த்தி நன்றியுரையாற்றி கூட்டம் நிறைவுபெற்றது.

## அதிமுக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு முடிச்சூர் கழக நிர்வாகிகள் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்

தாம்பரம் ஆக்.7-

செங்கல்பட்டு மாவட்டம் சிட்லபாக்கத்தில் கழக பொதுச்செயலாளர் முன்னாள் முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி யார் அவர்களின் ஆசியோடு பரங்கிமலை மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் எம்பி மனோகர் தலைமையில் முடிச்சூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவரும் பரங்கிமலை மேற்கு ஒன்றிய எம்ஜிஆர் மன்ற துணை தலைவர் என்.சசிகலா கல்கி, அம்மா பேரவை பரங்கிமலை மேற்கு ஒன்றிய இணை செயலாளரும் முடிச்சூர் 11வது வார்டு செயலாளர் டி.வி.ஆர் வெங்கட்ராமன் ஆகியோர் ஏற்பாட்டில் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட



கழகம் செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன் அவர்கள் பிறந்த நாளை அன்று முடிச்சூர் கழக நிர்வாகிகள் சார்பில் சால்வை அணிவித்து மரியாதை செலுத்தி பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவித்தது

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அண்ணா தொழிற்சங்க இணைச் செயலாளர் ஜே குணசேகரன், வார்டு செயலாளர்கள் கே.கணேசன், ராஜேந்திரன், ஆர்.குமார், ஜெயக்குமார், நாராயணன், ராஜா, முருகானந்தன், கஜேந்திரன், ஆதிகேசவன், யோகேஷ், சரவணன், கேசவன், தாஸ், மற்றும் மகளிர் அணி லலிதா சரளா கற்பகம் விஜயதரணி மற்றும் முடிச்சூர் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு சால்வை அணிவித்து பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.



# தாம்பரம் மாநகராட்சி 3வது மண்டலத்தில் 42வது மற்றும் 44வது வார்டு சார்பில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்

செம்பாக்கம் ஆக.7-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட காமராஜபுரத்தில் உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்திற்க்கான சிறப்பு முகாமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிதம்பரத்தில் துவக்கி வைத்ததை தொடர்ந்து தாம்பரம் மாநகராட்சி 3வது மண்டலம், 42 - 44 ஆகிய வட்டங்களில் தாம்பரம் மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்திற்க்கான சிறப்பு முகாமை துவக்கி வைத்து, பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் மேலும் முகாமில் தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார் இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, செம்பாக்கம் தெற்கு பகுதி செயலாளர் இரா.சுரேஷ், மாமன்ற உறுப்பினர்கள் கல்யாணி மணிவேல், இரா.ராஜா, கிரிஜா சந்திரன், வட்ட செயலாளர் சி.மணிவேல் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட மாநகர பகுதி அணிகளின் நிர்வாகிகள் வட்ட நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் மற்றும் அரசு அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




# போடி வெஸ்டர்ன் கார்ட்ஸ் ரோட்டரி சங்க புதிய நிர்வாகிகள் பொறுப்பு ஏற்பு

## நிகழ்ச்சியில் சேவை செம்மல் மக்கள் சேவகர் பசுமை நாயகன் விருதுகள் வழங்கி கௌரவிப்பு

தேனி. ஆக.7

தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் வெஸ்டர்ன் கார்ட்ஸ் ரோட்டரி சங்க தலைவராக கோபிநாத் வழக்கறிஞர், செயலாளர் விஜய் பாபு , பொருளாளர் வெங்கடேசன் , கலையரசி முருகன் , செந்தில்குமார் இணைச் செயலாளர் மற்றும் நிர்வாகிகள் உறுப்பினர்கள் என 72 பேர் போடி பாஸ்கரா திருமண மண்டபத்தில் நடந்த நிகழ்ச்சியில் பதவியேற்றனர். இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக போடி நகர மன்ற தலைவர் ராஜராஜேஸ்வரி சங்கர், போடி ஜமீன்தார் வடமலைராஜயபாண்டியன் ஆகியோர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் விருது பெற்றவர்கள் சேவை செம்மல் விருது ஜெகநாத் மிஸ்ரா தேசிய செட்டியார் பேரவை, மக்கள் சேவகர் விருது திருப்பதி மீனாட்சிபுரம் பேரூராட்சி தலைவர் , பசுமை நாயகன் விருது கண்ணன் காளிராமசாமி மேல சொக்கநாதபுரம் பேரூராட்சி சேர்மன் ஆகியோர்களுக்கு போடி வெஸ்டர்ன் கார்ட்ஸ் ரோட்டரி சங்க நிர்வாகிகள் பொன்னாடை போற்றி விருதுகளை வழங்கினர்.

# வேலூரில், 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர்கள் சங்கம் சார்பில் அரசுக்கு பல்வேறு கோரிக்கைகள் குறித்து போராட்ட ஆய்த்தக்கூட்டம்

## இரவு பகல் பாராமல் உயிரைக் காப்பாற்றும் 108 ஆம்புலன்ஸ் ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுமா தமிழக அரசு...?

வேலூர் ஆக.07

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, அண்ணா சாலை, ஏலகிரி அரங்கில், 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர்கள் சங்கம் சார்பில் போராட்ட ஆயத்தகூட்டம், 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர்களுக்கு 16% க்கு குறைவாக ஊதிய உயர்வு வழங்கக்கூடாது என தமிழக அரசு உடனான ஒப்பந்தத்தை பின்பற்றாமல் தன்னிசையாக, ஊதிய உயர்வை குறைத்து வழங்கிய தொழிலாளர் விரோத நடவடிக்கையை கைவிட்டு 2025 2026க்கான ஊதிய உயர்வை முறையாக வழங்கிடவும், சட்டவிரோத பணி நீக்கத்திற்கு எதிராக நீதிமன்றங்கள் வழங்கி உள்ள தீர்ப்பின்படி பணிநீக்கம் செய்யப்பட்ட



தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்கிட கோரியும், சட்டவிரோத 12 மணி நேர வேலை நேரத்தை கைவிட்டு, 8 மணி நேர, 3ஷிப்ட் முறையை நடைமுறைப்படுத்திட வேண்டியும், வேலூர் இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் ஒருங்கிணைந்த மாவட்ட 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் சார்பில் போராட்ட ஆயத்தக்கூட்டம், மாநில தலைவர் சிவக்குமார், மாநில பொதுச்செயலாளர் ராஜேந்திரன், மாநில பொருளாளர் சாரதிவேல் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநில, மாவட்ட அளவிலான நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். ஆம்புலன்ஸ் ஊழியர்கள் இரவு பகல் பாராமல் உயிரை காப்பாற்றி வரும் தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுமா இந்த தமிழக அரசு...? மத்திய மாநில அரசுகள் 108 ஆம்புலன்ஸ் ஊழியர்களின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற கோரிக்கை வைத்துள்ளனர்.

# திருத்தேர்வளை ஸ்ரீ ஆகாச முத்துக் காளியம்மன் கோவிலில் திருவிழா காலங்களில் கூடுதலாக அடிப்படை வசதிகள் செய்து தர கிராம மக்கள் மற்றும் பக்தர்கள் கோரிக்கை

ஆர் எஸ் மங்கலம்.ஆக.07-

இராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் தாலுகா ஆனந்தூர் அருகே திருத்தேர்வளையில் இந்து சமய அறநிலையத் துறைக்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ ஆகாச முத்துக் காளியம்மன் கோவிலில் திருவிழா காலங்களில் கூடுதலாக குடி நீர் ,சுகாதார வளாகம்,உடைமாற்றும் அறை சிறப்பு பேருந்துகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து தர கோரி கிராம மக்கள் மற்றும் பக்தர்கள் கோரிக்கை.



இது குறித்து கிராம மக்கள் மற்றும் பக்தர்கள் கூறுகையில் வருடம் தோறும் ஆடி மாதம் கடைசி வாரம் இந்து சமய அறநிலையத்துறைக்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ ஆகாச முத்துக் காளியம்மன் கோயில் திருவிழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது கிராம புறங்களில் மிகவும் பிரசித்தி பெற்ற இந்த கோவில் திருவிழாவிற்கு வெளியூர் மற்றும் வெளிமாட்டங்களில் இருந்து ஆயிரக்கணக்கில் பக்தர்கள் வருகை தந்து அம்மனை தரிசனம் செய்கின்றனர். ஆனால் கோவில் வளாகத்தில் போதிய அடிப்படை வசதிகள் இல்லாததால் குழந்தைகள், பெண்கள் ,முதியோர்கள் என பக்தர்கள் மிகுந்த சிரமம் அடைந்து வருவது தொடர் கதையாக உள்ளது இது குறித்து பல முறை அதிகாரிகளிடம் கூறியும் போதிய அடிப்படை வசதிகள் செய்து கொடுக்காமல் அலட்சியம் செய்து வருவது பக்தர்களிடையே தமிழக அரசின் மீது அதிர்ப்தியை ஏற்ப்படுத்தி உள்ளது எனவே அரசு மற்றும் துறை சார்ந்த அமைச்சர் மற்றும் மாவட்ட நிர்வாகம் பக்தர்களின் சிரமத்தை போக்கும் வகையில் பக்தர்கள் சிரமமின்றி சுவாமி தரிசனம் செய்வதற்கு ஏதுவாக இந்த ஆண்டு கடந்த வெள்ளி கிழமை அன்று காப்பு கட்டுதலுடன் துவங்கப்பட்ட இந்த கோவில் திருவிழா 10 ஆம் தேதி நிறைவடையும் நிலையில் திருவிழாவிற்கு 08,09,10 ஆகிய தேதிகளில் திருத்தேர்வளையில் அமைந்துள்ள ஸ்ரீ ஆகாச முத்துக் காளியம்மன் கோவிலுக்கு தேவகோட்டை,ஆர் எஸ் மங்கலம் ,திருவாடானை, உள்ளிட்ட பகுதிகளில் இருந்து திருவிழா காலங்களில் கூடுதலாக சிறப்பு பேருந்துகள் அதிகாலை 4:30 மணி முதல் இரவு 9 மணி வரை இயக்க வேண்டும் அது மட்டுமின்றி கோவில் வளாகத்தில் குடி நீர்,சுகாதார வளாகம்,உடைமாற்றும் அறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அமைத்து தர வேண்டும் என அரசு மற்றும்துறை சார்ந்த அமைச்சர் மற்றும் மாவட்ட நிர்வாகத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலத்திற்க்கு உட்பட்ட 11வது மற்றும் 12வது வார்டு சார்பில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்

பம்மல் ஆக்.7-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலத்திற்க்கு உட்பட்ட 11வது 12வது வார்டு பொதுமக்களின் அரசின் சேவைகள் திட்டங்களை அவர்கள் பகுதியிலேயே வழங்கிடும் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமை மாண்மிகு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் சினேகா, தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலச்சந்தர், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர்



இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி கமலக்கண்ணன், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ. காமராஜ், தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் குழு தலைவர் வே.கருணாநிதி ஆகியோர் துவக்கி வைத்தார் இதில் பகுதி கழகச் செயலாளர் த.ஜெயக்குமார், தாம்பரம் மாநகராட்சி துணை ஆணையாளர் சசிகலா, இணை ஆணையாளர் சொர்ணலதா, உதவி செயற் பொறியாளர் சத்தியசீலன், மாமன்ற உறுப்பினர் சத்யா மதியழகன் வட்ட கழக செயலாளர்கள் சாலா என்கின்ற சுகுமாரன், பி.ஸ்ரீதர், மாநகர தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் மதியழகன், சுகாதார ஆய்வாளர் பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் பகுதி கழக நிர்வாகிகள் கழகத் நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு முகாமை சிறப்பித்தனர்.

# தேனி மாவட்டம் மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக்குழுக் கூட்டம் : தமிழ்நாடு மாநில குழந்தைகள் உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர் ஆர்.ஜெயசுதா தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைர் ரஞ்ஜீத் சிங்,முன்னிலையில் நடைபெற்றது

தேனி, ஆக.7-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அன்று (05.08.2025) மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக் குழுக்கூட்டம் தமிழ்நாடு மாநில குழந்தைகள் உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர் ஆர்.ஜெயசுதா தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைர் ரஞ் ஜீத் சிங், முன்னிலையில் நடைபெற்றது.




இக்கூட்டத்தில் மாநில குழந்தைகள் உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர் ஆர்.ஜெயசுதா தெரிவித்தாவது, இக்கூட்டத்தில் குழந்தைகள் நலன் தொடர்பாக பல்வேறு கூட்டப்பொருள்கள் விவாதிக்கப்பட்டது. குறிப்பாக பள்ளி இடைநிற்றல் குழந்தைகளின் நலன், குழந்தை திருமணம் தடுப்பு, இளம் வயது கர்ப்பநிலை தடுப்பு, பாலியல் குற்றங்கள் உள்ளிட்டவைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

ஊரகம், வட்டாரம், நகராட்சி ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கூட்டத்தினை மூன்று மாதத்திற்கு ஒரு முறை நடத்தி குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து பள்ளிகளிலும் போதை பொருட்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், பாதிக்கப்பட்டவர்களை கண்டறிந்து குழந்தைகள் நலக்குழு மூலம் மறுவாழ்வு நடவடிக்கை மேற்கொள்ளுதல், குழந்தை தொழிலாளர் பணி அமர்த்தப்படுவது முற்றிலும் தடுத்தல் மற்றும் குழந்தைகளை பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு பாலியல் குற்றங்களுக்கான சட்டரீதியான தண்டனைகள் பற்றிய பதாகைகள் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் பொது இடங்களில் காட்சிப்படுத்த வேண்டும் மேலும், மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் பள்ளிகளிலும், மற்றும் அரசுப்பேருந்துகளிலும் குழந்தைகள் சேவை எண் 1098 குறித்த விழிப்புணர்வு பதாகைகள் வைக்க வேண்டும் என மாநில குழந்தைகள் உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் செல்வி சந்தியா, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கலைக்கதிரவன், மாவட்ட சமூக நல அலுவலர் சியாமளாதேவி, தேனிஅல்லிநகரம் நகர்மன்றத்தலைவர் ரேணுபி ரியா பாலமுருகன் உள்ளிட்ட அரசு மற்றும் தனியார்துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# மேல பார்த்திபனூர் ஊராட்சியில் மக்களை அல்லோல பட வைக்கும் ஊராட்சி நிர்வாகம்

ராமநாதபுரம் மாவட்டம் மேல பார்த்திபனூர் ஊராட்சியில் வீட்டு வரி ரசீது தண்ணி வரி ரசீது வீட்டு வரி ரசீது ஆன்லைனில் ஏற்றுவதற்கு என ஊராட்சி சார்ந்த அனைத்து வேலைகளுக்கும் ஒரு பெரும் தொகையை கொடுத்தால் மட்டுமே செய்து கொடுக்க முடியும் அப்படி கொடுக்க முடியவில்லை என்றால் செய்து கொடுக்க முடியாது என ஊராட்சி செயலர் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகிய இருவரும் கூறி வருவதாகவும் இவர்களுக்கென்று ஒரு இடைத்தரகரை வைத்துக்கொண்டு அவர் மூலம் வசூல் செய்வதாகவும் இதனை மாவட்ட ஆட்சியர் உடனடி நடவடிக்கை எடுத்து மேல பார்த்திபனூர் ஊராட்சி மக்களுக்கு உதவி செய்யுமாறு வேண்டுகோள் விடுகின்றனர்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161